உ

சிவமயம்.

ஸ்ரீ வேதவியாஸமஹாமுனிவர்
பாண்டவர்களுக்கு உபதேசித்த

கபிலவாசகம்.



சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1923. [பை 6.

34, ஆண்டியப்பநாய்க்கன் தெரு, சூளை மதராஸ்.

67

உ

கடவுள் துணை.

கபிலைவாசகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

தென்கயிலைத்திக்குமுதற் சீர்வா னுலகுபுகழ்
தென்கபிலைவாசகத்தைச் செப்பவே—முன்கை
வரிவாரணமேந்தி மானேந்திபோற்றுங்
கரிவாரணமுகவன் காப்பு.

நூல்.

உத்தரபூமியில் காமதேனுசிருஷ்டியின் கங்கைக்கு வடகரையிலோர் தெய்வலோகபுரமென்கிற வூரில் அந்தணராசிரமமென்னும் அக்கிராரத்தில்குடிவிளங்குமென்றோராயனுண்டு. அந்த ஆயன் மேய்க்கின்ற பசுக்கள் நானூறைந்நூறுண்டு. அப்பசுக்களுக்குப் பெயர் காமாட்சியென்றும், மீனாட்சியென்றும், கமலாட்சியென்றும், விசாலாட்சியென்றும், வநஜாட்சியென்றும், வடிவாம்பிகையென்றும், அபிராமியென்றும், சுந்தரியென்றும், மோஹாம்பரியென்றும், வேங்கட லட்சுமியென்றும், ஏகவல்லியென்றும், அமரா

வதியென்றும், ஐராவதியென்றும், சரஸ்வதியென்றும், நர்மதையென்றும், கோதாவிரியென்றும், தாம்பிரவர்ணியென்றும், துங்கபத்திரியென்றும், காவேரியென்றும், கன்னியாகுமரியென்றும், சொக்கநாயகியென்றும், கமலாலயமென்றும், சுபத்திரையென்றும், வேதவல்லியென்றும், நாராயணியென்றும், சுப்பம்மாளென்றும், பிரமராத்தாளென்றும், முத்துமாரியென்றும், மாரிமுத்தென்றும், அங்கம்மாளென்றும் அலர்மேலென்றும், வள்ளியம்மையென்றும், தெய்வானையென்றும், எல்லம்மையென்றும், நல்லம்மையென்றும், செல்லம்மையென்றும், அகலிகையென்றும், தாரையென்றும், துரோபதையென்றும், மண்டோதரியென்றும், சீதாதேவியென்றும், இந்திராணியென்றும், பூமிதேவியென்றும், ரம்பாவென்றும், ஊர்வசியென்றும், திலோத்தமையென்றும், மேனகையென்றும், திரிசடையென்றும், அஞ்சுகமென்றும், உண்ணுமுலையென்றும், அருந்ததியென்றும், வண்டார்குழலியென்றும், அல்லியரசாணியென்றும், பூங்குறத்தியென்றும், பூஞ்சோலையென்றும், செந்தாமரையென்றும், வடமலையென்றும், திருவேங்கடமென்றும், பெண்கணாயகமென்றும், பெருந்தேவியென்றும், பே

சாமடந்தையென்றும், பிரமாத்தையென்றும், விருதாசலமென்றும், சேஷாசலமென்றும், இந்திரரேகையென்றும்,சிவரேகையென்றும், தனரேகையென்றும், தான்யரேகையென்றும், மசசரேகையென்றும், சித்ராங்கியென்றும், ரத்நாங்கியென்றும், மரகதாங்கியென்றும், மோஹநாங்கியென்றும், கோமளாங்கியென்றும், சாமளாங்கியென்றும், ரமாமணியென்றும், சிந்தாமணியென்றும், தெய்வசிகாமணியென்றும், ரத்நாகரமென்றும், ராஜரத்னமென்றும், இரதிதேவியென்றும் இவ்வகைப் பெயரையுடைய பசுக்களின்னம் அநேகமுண்டு அப்பசுக்களுக்கு நீர் நிழல் புல்லுள்ளவிடத்தில் மேய்த்துக்கட்டிவெக்கை,வெதுப்பு, மாரடைப்பான், கோமாரி, புரைசூடு முதலிய வியாதிகள் வரவொட்டாமல் தன் சரீரத்தைப்போல பாதுகாத்துக்கொண்டு வருகிற நாளையில் ஒருநாள் பசுக்களையெல்லா மேயவிட்டுமேற்சொல்லியஇடையனொரு மரத்தடியில் நிழலுக்கிருக்கிற சமயத்திலே ஷை பசுக்களெல்லாம் காட்டிலுஞ் செடியிலும் மலையடிவாரத்திலும் நான்கு திக்கெங்குப்போய்மேயுகிறபோது அதிலொரு பிராமணன் வீட்டுக் கூராம்பசுவானது சிலதூர பதிசமாசப்போய் மேயுகிறவேளை

யில் ஓர் பெரிய வேங்கைப் புலியானது நாலைந்து நாளாய்த் திரியாத கானகமலையெல்லாந் திரிந்து எங்குமிரையகப்படாமல் தனித்துமேயுகிற பசுவைப்பார்த்து மணியினோசையினாலே தனது நெடியவாலைத் தட்டிக் கடவாயைசொரிந்தெச்சரித்துக் கோட்டாவிவிட்டுத் திக்கென்று நெருப்புப்பொரிகள் பறக்கத் தக்கதாகக் கந்துபாய்ந்துவந்த மாத்திரத்திலே அந்தப்பசுவுக்கு நினைவழிந்து நெடுமூச்செறிந்து நிலைகலங்கி நிலையிலிருந்தது. இப்படிக்கிருந்த பசுவை மலையடிவாரமாக மெள்ள நடத்திக்கொண்டு போச்சுது. அப்போதந்தப் பசுவானது தன் கண்ணை விழித்துப் பார்க்குமளவிலே கண்களிருண்டு கால்களும் நடுநடுங்கி மெய்மறந்து மிகவும் பயந்து வருந்துகிற பசுவை ஷை மாகதராஜன் பார்த்து வாராய் வாராய் கபிலாய் நீ பெருமூச்சுவிட்டா லுன்னாலே யாகிற காரியமேதிருக்கின்றது நான் நாலைந்துநாளா யிரைகிடையாம லெங்குந்திரிந்துவந்தேன் இன்று நான் பிரவேசித்தவேளை நல்ல முகூர்த்தமாகையா லெனக்கு நல்லமெதுவாகிய இரைகிடைத்தது நீவிசனப் பட்டதினா லென்னகாரிய மிருக்கிறதென்று மாகதராஜன் சொல்லக் கபிலையானது நிலத்தி லுதித்த பூண்டு நிலத்திலேமடியவேண்டும் பூமியிலுள்ளநாள்

வரைக்குமிந்த சரீரம்நிற்பதில்லை. நீரின்மேற் குமிழி போல அநித்தியமேயல்லாமல் வேறில்லை. ஆன படியினலே உமக்கு இரையாகிறதற்கு நானென்ன பாக்கியஞ்செய்தேனே தெரியாது ஆனலெனக்கொரு விண்ணப்பமுண்டு. அதென்னவென்றால் நான் வெகு நாள் மலடாயிருந்து புத்திரவாஞ்சையினலே ஈன்ற பசுக்களைக்கண்டு மிகவு மேக்கமிட்டுக் கண்ட கண்ட தலங்களையெல்லாங் கையெடுத்துக்கும்பிட்டு காணாத கோயிலுக்கெல்லாங் காணிக்கைக் கொடுத்தனுப்பி தெய்வ கடாட்சத்தினலே நானொருசேங்கன்றையீன் றெடுத்தேன் அந்த சேங்கன்றானது இளங்கன்றான படியினலே இன்னம் புல்லைப்பிடித்து மேயுகிறவகை யறியாது மேலும் புத்தியறிந்தா லெனக்கொரு பய மில்லை இப்போது நீரென்னை இரையாகக் கொண்டு போகிறதற்கு நானெவ்வளவு பயப்படவில்லைமேலும் நான் வீடுவிட்டு வெளியிலே புறப்படுகிறபோது வாசற்படி என்தலையிலிடித்தது, காலுமடிந்துக்கொ ண்டது, வழியன் வலமாயிற்று, விச்சுளிகட்டிற்று, கெவுளிகொட்டிற்று, கருடன் சுற்றிற்று, நரையான் தடுத்தது, எண்ணெய்வாணிய னெதிர்ப்பட்டான், ஒற்றைப்பாரர்ப்பா னெதிர்ப்பட்டான், விறகுதலைய

னெதிரிட்டான், காடைகட்டிற்று, விதவையைக்கண் டேன், ஆந்தைசீறிற்று, ஓரிகுறுக்கிட்டது, நானெ ன்ன அவசகுனங் கண்டேனோ அது எனக்குத் தெரியாதென்று கபிலையானது சொல்லிப் புலியைப் பார்த்து ஐயா மாகதராஜனே நான்போய்க்கன்றுக்கு ஊட்டங்கொடுத்துப் புத்திமதிகளைச்சொல்லி என் னினத்தாரிடத்தி லென்கன்றையொப்பித்துப் பிற்பா டுமக்கு நானிரையாக ஒரு க்ஷணத்திலேவருகிறேன் அப்படிக்கு நான் பொய்சொல்லிப் போவேனென்று தாங்களெண்ணவேண்டாம் அப்படி உமக்கு நம்பிக் கை யில்லாவிட்டால் நான் பிரமாணஞ் செய்துக் கொடுக்கிறேன் கேளும் மிருகராஜனே செய்த நன் றியை மறந்தவன் பொய்சாட்சி சொன்னவன் வழக் கோரஞ்சொன்னவன் ஏரி குளங்களைத் துற்றவன் விளையும்பயிரை மேய்த்தவன் விற்குந்தானியத்தில் பதரைக்கலந்தவன் நேரம்விசாரியாம லாக்கினைசெய் தவன் அடைக்கலத்தைக்காட்டி விட்டவன் தாய் தந் தையைப் பழித்தவன் பெரியோரை யிகழ்ந்தவன் அக்ராரத்தையழித்தவன் தண்ணீர்ப்பந்தலை யழித்த வன் ஆலயத்தை யழித்தவன் வித்தையை மறந்தவன் கற்பையழித்தவன் விற்கும்பண்டங்களை விலைகுறை த்தவன் விருந்தை வைத்துண்டவன் ஊருடமைத்

தின்றவன் அதிதிகளையடித்தவன் பிச்சையைத்தடுத்தவன், பித்து, மலடு, ஊமை, மூடம், குருடு, செவிடு, கூன் இவர்களை யடித்துப் பறித்தவன், பசுவையடித்தவன், பசுவுக்கு எச்சிலைபோடுகிறவன், குருவை மறந்தவன், கொலைசெய்தவன், வழியில் முள்வேலியைப்போட்டவன், வாயில்லாச் சீவன்மேல் வலிய பளுவை வைத்தவன், குலமகளைக்கைவிட்டு விலைமகளை இச்சித்தவன் எல்லையளவைப் பிடுங்கினவன், வாத்தியார், வண்ணான், மருத்துவன், நாவிதன் இவர்கள் கூலியைக்கொடாதவன், பிறர்தாரத்தை விரும்பினவன், கன்னக்கோல் வைப்பவன், தூண்டில் போடுகிறவன், படுகுழிபாய்ச்சுகிறவன், நீரிலம்மணமாகநிற்பவன், நம்பினவரை நட்டாற்றில்விட்டவன், அங்காடிக்கூடையை அதிரவிலையிட்டவன், பங்கிலாளொருவன் பங்கைப்பறித்தவன், அளவைக்குறைத்து விற்பவன், வேட்டைநாயை வீட்டிற்கட்டி வைத்தவன், ஒருவன் விவாகத்தைத் தடுத்தவன், பிச்சையிடாமல் தானே உண்பவன், மருந்திட்டுக் கொல்லுகிறவன், வேதசாஸ்திரங்களைத் தப்பிநடந்தவன் இப்படியாகச் சொல்லப்பட்ட பாவங்களைச் செய்தவன் போகிறதோஷத்திற் போவேனென்று கபிலைசொல்ல

மிருகராஜன் ஆ ஆ இந்தப் பசுவினுடைய நற்குண நற்செய்கையாகிய அறிவையும் மெய்ஞ்ஞானத்தையும் பிரமாணவாக்கியங்களையும் மாகதராஜன் சொல்லக்கேட்டு மிகவுஞ் சந்தோஷமடைந்து நீ சீக்கிரமுன் வீட்டிற்குப்போய்க் கன்றுக்கு முலையூட்டங்கொடுத்து உங்களினத்தாரைகயி லொப்பித்துப் போட்டு விரைவில் வரக்கடவாய் நீ வருகிற வரைக்கும் வழிபார்த்துக் கொண்டிருப்பேன் மேலுமென் கையி லகப்பட்டவுன்னைத் தப்பவிட்டிந்த காட்டிற் பட்டினியா யிருப்பேனோ வென்று மிருகராஜன் சொல்லக் கபிலையானது கேட்டு உமக்கு நானிரையாவதற்குச் சந்தேகமில்லை உமக்கனேகம் புண்ணியமுண்டாகும் ஆகையாலெனக்குச் செலவு கொடுத்தனுப்பும் ஐயா மிருகராஜனே யென்று கேழ்க்க அப்படிக்கேமிருகேந்திரன் செலவுகொக்கக் கபிலையானது செலவுபெற்றுக்கொண்டு தன்னூரைநோக்கிஓட்டமாயோடி வருகிறபோது ஷ ஆயன் பசுக்களை யெல்லாம் கூட்டிக்கொண்டு வருகிற சமயத்தில் பிராமணன் வீட்டுக் காராம்பசுவைக் காணமற் பற்பல திசை யெங்குந்தேடிப் பின்பசுக்களுடைய பெயரைச் சொல்லிக் கூடிகுலத்தாளே காராம்பசுவைக் காணீரோ, நீலமலைத்தாளே காராம்பசுவைக் காணீரோ,

ரத்நஹாரமே காராம்பசுவைக் காணீரோ, செங்கமலத்தாயே காராம்பசுவைக் காணீரோ, முத்துமாரியே காராம்பசுவைக் காணீரோ, வேதவல்லியே காராம்பசுவைக் காணீரோ, அலர்மேலுமங்கையே காராம்பசுவைக் காணீரோ, ஆதிலட்சுமியே காராம்பசுவைக் காணீரோ, அஷ்டலட்சுமியே காராம்பசுவைக் காணீரோ, வேதலட்சுமியே காராம்பசுவைக் காணீரோ, கமலக்கண்ணியே காராம்பசுவைக் காணீரோ, அன்னக்கிளியே காராம்பசுவைக் காணீரோ என்றிந்தப்படிக்குப் பசுக்களுடைய பெயரைச்சொல்லிச் சொல்லிக்கூப்பிட்டுக் காடுஞ் செடியும் மலைகளுமெங்குந் தேடிக்காணாமல் ஆயன் மிகவும் விசாரத்துடன் வருகிறபோது கன்றுக்கு மிகவும் பசியதிகமாய்த்தேடித் தவித்துக் கொண்டு அம்மா அம்மாவென்று நான்கு திக்கிலும் பார்த்து நிற்கிற தருணத்தில் அந்த பசுவுக்கு கன்று கூப்பிட்டசத்தங் கேள்விப்பட்டுப் பெருமூச்செறிந்து தன்னுடம்பெல்லா மயிர்க்குச்செறிந்து நடுநடுங்கிக் கன்றைப்பார்த்து அப்பாவென்று தன்நாவினாலே அக்கன்றினுடைய தேகமுழுமையுந் தடவிக்கொடுத்துப்பின்பு முலையையூட்டங் கொடுக்கக் கன்றானது தாயைப்பார்த்து ஏனம்மா வுன்னுடம் பெல்லாங் கிள்ளுங்கிழியும்

விறனகத்தாற் பட்டு மெய்தளர்ந்து முகம்வாடி உதி
ரம் பெருகியிருப்பானேனென்று கன்றுகேழ்க்கப் பசு
வானதொன்று மில்லை யென்றுசொல்ல ஷை கன்று
மறுத்துக்கேட்க ஆனால் சொல்லுகிறேன் கேள்
என்மகனே எனகலிதீர்த்த பெருமானே என்னப்
பனே என்கண்மணியே என்னரு மருந்தே என்னை
யனே என்றுவியே முள்முதலிய செடிக்கொடிலுமலை
யிலு மேய்கிறபடியினலே தேகமாதியந்தமுமுள்ளே
றுண்டு மேலும் நேற்றிய சாயங்காலம் மேயப்போன
விடத்திலொரு மிருகேந்திரன் கையிலகப்பட்டுக்
கொண்டேன் என்னைக்.கொல்ல வெத்தனித்தபோது
ஐயா மிருகேந்தரனே எனக்கொரு கன்றுண்டு அந்த
கன்றுக்கு முலையூட்டங் கொடுத்துப் புத்திமதிகளைச்
சொல்லி எங்களினத்தார்வச மடைக்கலமா யொப்
பித்து வருகிறேனென்று ஷை புலிக்குச் சத்தியம்
பண்ணிவந்தேன் அப்படியே நான் வாக்கியங் தப்பா
மற் புலிக்கிறையாகப் போகவேண்டும் நீபுத்தியுள்ள
வனுய்க் கன்றுகளுடனேகூட மேய்ந்தோடிப் பாடித்
துள்ளிக்குதித்துக் காலையொடித்துக் கொள்ளாதே
சிறுகயிறு கட்டினல் அறுத்துக் கொள்ளாதே பயிர்
முதலிய விடத்தில் மேயாதே புல்லுள்ள விடத்

திலே மேய்ந்து நீருள்ளவிடத்திலே குடித்து நிழ லுள்ள விடத்திலே நிற்பாயாக மேலுமந்திசந்திக்கு முன்னே வீட்டிற்குவந்து சேருவாயாக அல்லாமலு மென்னை நினைந்து நினைந்து மனந்தளராதேயென்று கன்றுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி மேயு கிற பசுக்களுடனே ஓ பசுக்களே கேளுங்கள், நான் மேயபோன விடத்திலே ஒரு வேங்கைப்புலியினிடத் தில் அகப்பட்டுக் கொண்டென்னைக் கொல்லப் போகிறபோது நான் கன்றுக்கு முலையூட்டங்கொடு த்து வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி இனத்தார் முன்னிலையி லொப்பிவித்து வருகிறே னென்று வந்தேனுகையா வின்றைக்கு நான் புலிக்கு இரை யாகப் போகவேண்டும் நீங்களிந்தக் கன்றைப் பத் திரமாகப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லப் பசுக்களெல்லாம் நீ புலியின்கையிலகப்பட்டுத் தப்பி வந்ததே மெத்த நல்லகாரியமாயிற்று இப்போது நீ மறுபடியுந் திரும்பிப்போக வேண்டிய காரண மென்ன நீபோகவேண்டாஞ் சத்தியமேது பிரமாண மேதுபுலியின்கையிலே தப்பிவந்ததேசத்தியமென்று வெகுவாய் பசுக்கள் சொல்லவுங் கேளாமல் சத்தி யந்தப்பிலைல் வெகுபாவத்தை யனுபவிக்கவேண்டும் இந்த சரீரம் நிச்சயமில்லை அநித்தியசரீரம் நீரின்

மேற்குமிழி இந்த வாழ்வு நிற்கப்போகிற தில்லை பாபத்திற்கு பயப்படவேண்டும் நீங்கள் இதற்குத் தடைசெய்ய வேண்டாஞ் சந்தோஷமாகச் செலவு கொடுத்தனுப்பினல் உங்களுக்குப் புண்ணியஞ் சித்திக்குமென்று கபிலைசொல்ல அதுகேட்டு மற்றபசுக்கள் சொன்னது நீசத்தியம் தப்பாமற் போகவேண்டுமென்றிருந்தால் தடங்கலென்ன யிருக்கிறது அப்படியே போவென்று செலவுகொடுக்க ஷை சாராம் பசுவானது செல்வு பெற்றுக்கொண்டு போகச் சேங்கன்றனது தாய்க்குமுன்னே குதித்தோடிவந்து தாயோடேகூட நடக்கப் பசுக்களெல்லாந்தடுக்க நிற்காமற் சாகிறதே நல்லது சந்திரனைக்காணுத குமுதத்தைப்போலவும், சூரியனைக்காணுத தாமரையைப் போலவும், மாரிகாணுத பயிரைப்போலவும், சேறுகாணுத வண்டைப் போலவும், கலையைக்காணுத மானைப்போலவும், கரைகாணுத வோட்டத்தைப்போலவும், சோடுகாணுத பேடுபோலவும், தாயைக்காணுமலிருக்கிறதைப் பார்க்கிலும் தாயோடேகூட சாகிறதே நல்லதென்று கன்றனது கண்ணீர்விட்டு அழுது வருந்துகிறபோது மற்றப்பசுக்களெல்லாங் கூடிக் கன்றுக்கு மிகவுறுதிப்பாட்டைச் சொல்லிக் கன்றைதேற்றி நிறுத்தினர்கள்.

பிற்பாடு ஷ்டி காராம்பசுவதனது முன்வந்தவழி யைத் தொடர்ந்துவந்து வீரும் ஓய் ஐயா மரகத ராஜனே நான்போய் வருகிறவரைக்குந் தாங்கள் மிகுந்த பசியாய்த் துயரத்துடனே இருந்தீர்கள் அது மெத்தவுந் தோஷ மெனக்கு வந்து நேரிட்டது இனியாகிலு மென்னைப் புசித்துப் பசியாற்றிக் கொள்ளுமென்று கபிலைசொல்ல மரகதராஜன்கேட்டு தனது குகையைவிட்டு வெளியில்வந்து பசுவைப் பார்த்து அத்தியந்த சந்தோஷப்பட்டு வுராய் கபி லாய் நீ சத்தியந்தப்பாமல் வந்தபோதே என்பசிதாக மெல்லாந் தணிந்துப்போயிற்று ஆதலால் நீ திரும் பிப்போயுங்கள் இனத்தாரண்டைக்கூடி வாழக்கடவா யென்று மிருகராஜன் சொல்ல பசுவுகேட்டு சுவாமி மிருகராஜனே நான் வருகிறதற்கு நேரமாயிற் றென்று தாங்கள் கோபிக்கவேண்டாம் மேலும் நான் திரும்பி இனத்தாரிடத்திற் சென்றால் தாங்களுக் கிரையாக மாட்டாமல் நடுவழியிலே பயந்து திரு ம்பி வந்து விட்டேனென்று சில வார்த்தைகளினாலே யென்னைப்பேசி யேசுவார்கள் அவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு உயிரைவைக்க மாட்டேனாதலால் தேவரீருடைய பசிதணிய வென்னைப் புசித்து விடு மென்று கபிலைசொல்ல மிருகராஜனதைக்கேட்டு என்

பசி உன்னைப்பார்த்த மாத்திரத்திலே பசியாறிப் போய்விட்டது இன்றைக்குன்னைப் புசித்துப் பசியாறினாலெத்தனை நாளைக்குப் பசியில்லாம லிருக்கப் போகுது முன்னென்னபூர்வஞ் செய்தேனோ அம்புவியில் வெம்புலியாகப் பிறந்து கும்பிக்கிரைதேடி வெம்பியலையப் பட்டேனிதுபோதாதா ஆதலினாலே இத்தனை சத்தியமும் நீதியும் விவேகமுள்ள உன்னை நான் புசித்தால் பதிவிரதாபங்கம் பண்ணினவன் போகிறதோஷத்திலேபோவேன் இன்னம்நீசொன்ன பிரமாணந் தப்பினவனென்ன தோஷத்திற் போவானோ அந்த தோஷத்திலே நானும் போகக்கடவேன் உன்னுடைய தருமமாய்ப்போகுது நீ போயுன் கன்றுடனே சேர்ந்துக்கொண்டு இனத்தாரோடே கூடிச் சுகமாய் வாழக்கடவாயென்று மிருகராஜன் மெத்தவும் வேண்டிக் கொண்டதற்குப் பசுவானது இந்த சரீரத்தை உனக்கிரையாகக் கொடுத்து விட்டேனினிமேல் நான் போகமாட்டேனென்று இருவரும் வாக்கு வாதம் பண்ணுகிற புதுமையை இரஜித கயிலாசவாசியாகிய சந்திர சடாதர சாம்பசிவமூர்த்தியும், சகலலோகரட்சகனாக விளங்காநின்ற வைகுண்ட நாதனாகிய ஸ்ரீ மகாலட்சுமி சமேதனும், சகல சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமதேவரும், தேவரிந்திராதி முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்களும், அஷ்டவசுக்களும், அஷ்டதிக்கு பாலகரும், பன்னி

ரண்டு சூரியரும், ஏகாதசருத்திராதிகளும், கின்னரர், கிம்புருடர், கெருடகாந்தருவர், சித்தவித்தியாதரர், தும்புருநாரதர் முதலிய தேவர்கள் இவ்வாச்சரியத்தைக்கண்டு தாங்கள் தங்கள் வாஹனங்களிலேறிக் கொண்டு வந்து புலியினுடைய சத்தியத்தையும், பசுவினுடைய சத்தியத்தையும் பார்த்து மிகுந்த சந்தோஷத்தை யடைந்து ஷ பசுவுக்கும் புலிக்கும் மகத்தாகிய மோக்ஷபதவியைக் கொடுத்துப் புஷ்பகவிமானத்தி லேற்றிக்கொண்டு தேவ துந்துபி முழங்கப் புஷ்பமாரி பெய்யும் சொர்க்கத்தை சேர்ந்தார்கள்.

ஆதலால் சத்தியந் தப்பாமல் கபிலையானது நடந்தபடியால் திரிமூர்த்திமுதலிய தேவர்கள் களிக்கத்தக்கதாகக் கபிலையும் புலியும் மோக்ஷவாசிகளானார்கள். ஆகையாலிந்த கபிலைவாசகத்தைப் படித்தவருங் கேட்டவருங் கேட்பவரைக்கண்டு தரிசித்தவரும் மஹாபுண்ணிய மோக்ஷ முண்டாகும்.

இந்த கபிலைவாசகத்தை ஸ்ரீவேதவியாஸ மஹாமுனிவர் பூலோகத்திற் பாண்டு புத்திரராகிய பாண்டவர்களுக்குத் தெரியச் சொன்னார். அதனாலே அவர்கள் திவ்விய சந்தோஷத்தையடைந்து பின்பு மோக்ஷத்தை யடைந்தார்கள்.

கபிலைவாசகம் முற்றிற்று.